உண்மை நகல்

தமிழ்நாடு அரசு

**சுருக்கம்**

நத்தம் – நிலவரித்திட்டம் – நத்தம் நிலவரித்திட்டத் தனி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டாக்கள் மீதான மேல்முறையீடுகளின் மீது ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் – நிலவரித்திட்ட உதவி அலுவலரிடமிருந்து கோட்டாட்சியருக்கு மாற்றப்படுதல் – ஆணைகள் வழங்கப்படுகின்றன.

---

வருவாய் [நி.அ.2(1) ]துறை

அரசாணை (நிலை) எண்.693 நாள் 24.07.97

**மீண்டும் படிக்கவும்:**

1. அரசாணை நிலை எண்.1971, வருவாய்த் (நி.அ.2) துறை, நாள் 14.10.1988.
2. அரசாணை நிலை எண்.1738, வருவாய்த் துறை, நாள் 31.07.1990.

படிக்கவும்:

3. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதம் எண்.எ1/19453/ 95(இ), நாள் 7.3.1996.
4. அரசு கடிதம் எண்.16331/நி.அ.2(1)/96–1, வருவாய், நாள் 6.8.1996.
5. நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் மற்றும் இயக்குநர் கடிதம் எண்.எ1/19453/95, நாள் 28.10.96.

*******

**ஆணை:**

நத்தம் நிலவரித்திட்டத்தின் தனி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டாக்கள் மீதான மேல்முறையீடுகளில் மீது ஆணை பிறப்பிக்கும் அதிகாரத்தை கோட்டாட்சியர்களுக்கு வழங்குதல் குறித்து சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அரசிற்குச் செயற்குறிப்புகள் அனுப்பியுள்ளார்.

2. தமிழகத்தில் சென்னை மாநகரம் நீங்கலாக உள்ள ஏனைய வட்டங்களில் நத்தம் மனைகள் மற்றும் பிற பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் வேளாண் நிலங்கள் இவற்றிற்கு நத்தம் நிலவரித்திட்டப் பணி மேற்கொள்ள அரசாணை நிலை எண்.1971, வருவாய்த்துறை ( நில அளவை) நாள் 14.10.88–இல் ஆணையிடப்பட்டது என்றும், இவ்வாணையின் அடிப்படையில் 1989 முதல் திட்டப்பணி மேற்கொள்ளப்பட்டு இதுவரை 100 வட்டங்களில் கிராம நத்தம் திட்டப்பணி முடிவுற்றுள்ளன என்றும், தற்போது 60 வட்டங்களில் இப்பணி நடைமுறையில் உள்ளது என்றும், மேலும் 8 வட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும், இத்திட்டத்தின் கீழ் இதுவரை 7782785 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், இதே போல் நகரத்தில் திட்டப்பணி தற்போது ஆரம்ப நிலையில் உள்ளது என்றும், இதுவரை நகரளவை திட்டப்பணியில் முதல் கட்டமான இறுதித் தணிக்கைப் பணி 12 நகரங்களில் முடிவுற்றது என்றும், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். மேற்படி அரசாணையில் பிரிவு 7–இன்படி, நத்தம் தனி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டாக்களில் எவரேனும் இடருற்றிருப்பதாகக் கருதினால் சம்பந்தப்பட்ட நிலவரித்திட்ட உதவி அலுவலரிடம் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்றும், பிரிவு 8–இன்படி நிலவரித்திட்ட உதவி அலுவலரின் மேல்முறையீட்டு ஆணையின் மீதான மறு பரிசீலனை மனுக்களை மறு பரிசீலனை செய்ய சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

Scanned by CamScanner

3. தற்போது உள்ள நடைமுறையில் சில இடர்ப்பாடுகள் உள்ளனயென்றும், 5-8 மாவட்டங்களை ஆட்சி எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வரும் நிலவரித்திட்ட உதவி அலுவலரிடம் மேல்முறையீடு செய்து கொள்ள, சுமார் 100 அல்லது 200 கி.மீ. வரை பொது மக்கள் பயணம் செய்ய வேண்டியிருப்பதால் பணச் செலவாவதுடன் காலமும் வீணாகுவதால் பொதுமக்கள் குறிப்பாக, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை மக்களுக்கு இது மிகவும் சிரமமானதாக உள்ளது என்றும், மேலும் நிலவரித்திட்ட உதவி அலுவலர்களுக்கு அதிகமான வட்டங்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வருவதால் மனுக்கள் அதிகமாக உள்ளன என்றும், மேல்முறையீட்டு மனுக்களை ஏற்று ஆணை பிறப்பிக்கச் சம்மந்தப்பட் கோட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுமேயானால், வரக்கூடிய மனுக்களின் எண்ணிக்கை குறைவாகயிருக்குமாதலால் அவற்றின் மீது விரைவாக புலன் விசாரணை செய்து முடிவு எடுக்க இயலும் என்றும், மேல் முறையீட்டு மனுக்கள் தொடர்பான ஆவணங்களை விரைவில் பெற இயலும் என்றும், பொதுமக்களுக்கும் தங்கள் கோட்டத்திலுள்ள அலுவலரையேத் தொடர்பு கொள்ள வேண்டியிருப்பதால் அவர்களுக்கு எந்தவிதமான சிரமமும் இருக்காது என்றும், மேற்கண்ட மனுக்களின் மீது கோட்டாட்சியர்களே முடிவு எடுத்து ஆணை பிறப்பிக்கலாம் என்ற கருத்தை அரசுக் கடித எண்.105020/நி.அ.2(1)/90-6, வருவாய், நாள் 6.7.91 -இல் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளாதபோதும், இதை அரசு ஏற்பின் மேல்முறையீட்டு மனுக்களின் மீது விரைவில் முடிவெடுக்கவும் திட்டப்பணியினை மேலும் விரைவில் முடிக்கவும் வாய்ப்புகள் உள்ளதால், மாறிவரும் சூழ்நிலையில், நத்தம் நிலவரித்திட்டத்தின் தனி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டாக்களின் மீதான மேல்முறையீடுகளின் மீது ஆணை பிறப்பிக்க சம்பந்தப்பட்ட கோட்டாட்சியர்களுக்கு அதிகாரம் வழங்க ஆணை பிறப்பிக்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் பரிந்துரைத்துள்ளார்.

4. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பை அரசு நன்கு ஆய்வு செய்தது. நத்தம் நிலவரித்திட்டத் தனி வட்டாட்சியரால் வழங்கப்படும் பட்டாக்களின் மீது, உதவி நிலவரித்திட்ட அலுவலரிடம் மேல்முறையீடு செய்து கொள்ள வரும் போது மக்களின் குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள வறியவர்களின் கிராமத்திினைப் போக்கிடவும், மேலும் மேற்கண்ட மனுக்களின் மீது உடனுக்குடன் முடிவு எடுப்பதற்கும் ஏதுவாக, நத்தம் நிலவரித்திட்டத் தனி வட்டாட்சியரால் வழங்கப்படும் பட்டாக்களின் சம்பந்தமாக அளிக்கப்படும் மேல்முறையீட்டு மனுக்களின் மீது ஆணை பிறப்பிக்கும் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட கோட்டாட்சியர்களுக்கு வழங்கி அரசு ஆணை பிறப்பிக்கிறது.

5. இது சம்பந்தமாக தக்க வரைவுத் திருத்த அறிவிக்கையினை விரைவில் அரசிற்கு அனுப்பி வைக்குமாறு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பி.எஸ்.பாண்டியன்
அரசு செயலாளர்.

பெறுநர்:
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை -5.
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் மற்றும் இயக்குநர், சென்னை-5
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
நிலவரித்திட்ட அலுவலர், தஞ்சாவூர்.
தனி நிலவரித்திட்ட அலுவலர்கள் (திருவண்ணாமலை, மதுரை, தஞ்சாவூர்,
தருமபுரி மற்றும் நீலகிரி)

**நகல்:**
அரசாணை எண்.1971, வருவாய், நாள் 14.10.88
அரசாணை எண்.1738, வருவாய், நாள் 31.7.90.
/ ஆணைப்படி /அனுப்பப்படுகிறது/

2/5/2023

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

Scanned by CamScanner